# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(வரைவு அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/மி.ப.வி.(D.C)/8 – 12, 24–08–2009 நாளிட்டது )

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

---

தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஒருசில திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகையத் திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 46ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 21–07–2009 நாளிட்ட அறிவிக்கை எண்.தமிஒஆ/மி.வ.வி (SC) /8/1/இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2இல் (இதன் பின்பு இதில் முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை இதன் மூலம் குறித்துரைத்துள்ளது :–

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

a) இந்த விதித் தொகுப்பு, 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு என்று அழைக்கப்பெறும்.

b) இது, தமிழ்நாடு அரசிதழில் அது வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை விதித் தொகுப்பின் 29ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை விதித் தொகுப்பின் 29ஆம் ஒழுங்குமுறைவிதியின் (12)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் (ii)ஆம் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது : –

“(ii) மொத்தத் தேவையானது 5 மெ.வோ. ஆ(MVA)–க்கு மேற்படுகிற விடத்து, கூட்டுக்குடியிருப்பு / வணிக வளாகங்கள் உள்ள இடங்களில் துணை–மின் நிலையம் / மின்

திறப்பு நிலையம் நிறுவுவதற்காக பின்வரும் வரன்முறைகளின்படி இடம் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். இந்தப் பகுதிகள் திட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுக் காட்டப்படுதல் வேண்டும். ''

துணை–மின் நிலையங்களை நிறுவுவதற்காகத் தேவைப்படும் நிலம் கீழே கொடுக்கப்பட்டுள்ள வரம்பிற்கு மேற்படுதல் ஆகாது :

| துணை–மின் நிலையத்தின் மின்னழுத்த அளவு | சதுர மீட்டரில் தேவைப்படும் நிலம் | |
|---|---|---|
| | வழக்கமான துணை–மின் நிலையம் | அடக்கமான துணை–மின் நிலையம் |
| 33 கி.வோ. துணை–மின் நிலையம் | (உட்புறம் ) 1520<br>(வெளிப்புறம்) 3160 | 225 |
| 110 கி.வோ. துணை–மின் நிலையம் | (வெளிப்புறம்) 4000 | 1050 |
| 230 கி.வோ. துணை–மின் நிலையம் | (வெளிப்புறம்) 16000 | 1750 |

**குறிப்பு :**

(a) பெருநகர / மாநகர வரம்பின் புற எல்லையிலிருந்து 60 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள இடங்களில் உரிமம்தாரர், அடக்கமான துணை–மின் நிலையத்தை நிறுவலாம் ;

(b) நகராட்சி வரம்பின் புற எல்லையிலிருந்து 30 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள இடங்களில் உரிமம்தாரர், அடக்கமான துணை–மின் நிலையத்தை நிறுவலாம் ;

(c) பேரூராட்சி வரம்பின் புற எல்லையிலிருந்து 10 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள இடங்களில், உரிமம்தாரர், அடக்கமான துணை–மின் நிலையத்தை நிறுவலாம் ;

(d) பிற இடங்களில், உரிமம்தாரர், தம்முடைய விருப்பப்படி துணை–மின் நிலையத்தை நிறுவலாம் ;

(e) அந்த நிலப்பகுதியானது, திறன் மின்மாற்றியை எளிதாகக் கொண்டு செல்வதற்கு நிலத்தின் ஏதாவதொரு பகுதியில் மட்டுமாவது உரிய அணுகுசாலையுடையதாக இருத்தல் வேண்டும் ;

(f) நிலப்பகுதியின் அளவுகள், உரிமம்தாரர் நுகர்வோருக்கு, அளிக்கும் குறிப்புரைகளின்படி இருத்தல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**(இரா. பாலசுப்பிரமணியன்)**
செயலாளர்